சார்பு நீதிமன்றம், அவிநாசி

**MCOP No.39 /2018**

Dt: 08.02.2023

நீ.ம.சா. – 2 சுந்தரமூர்த்தி

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

14.09.2022 தேதியிட்ட ஊனச்சான்று வழங்கிய மாவட்ட மருத்துவ குழுவில் நான் ஒரு உறுப்பினர்தான். மேற்படி ஊனச்சான்று நீ.ம.சா.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. நான் தற்போது திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் மனுதாரரை பரிசோதனை செய்யும்போது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தது. அவருக்கு விபத்தில் அடிபட்டு வலது காலில் டிபியா என்னும் எழும்பு உடைந்திருந்தது. வலது முழங்கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டு குணமாகி இருந்தது. மேற்படி மனுதாரரை ஆய்வு செய்யும்போது 3 மருத்துவர்கள் அந்த குழுவில் இடம் பெற்றிருந்தோம். நான் எழும்பு சிகிச்சை மருத்துவ நிபுணர் ஆவேன். அவருக்கு ஏற்பட்டது Complete Fracture ஆகும். மேற்படி மருத்துவ குழு பரிசோதனை அறையில் மனுதாரரை பரிசோதனை செய்தோம். அவருக்கு எக்ஸ்ரே எடுத்து பார்த்தேன். மேலும் மேற்படி முழங்கால் மூட்டின் அசைவுகளை பரிசோதனை செய்தேன். ஸ்க்ரீனிங் டெஸ்ட் தேர்ச்சி பெற்றால் உபகரணங்களை வைத்து பரிசோதனை செய்யத் தேவையில்லை. மனுதாரரை உட்கார வைத்து, நிற்க வைத்து, நடக்க வைத்து பரிசோதனை செய்தோம். அவற்றை நான் குறிப்பு எடுத்துள்ளேன். மேற்படி எலும்பு முறிவால் காலில் நீள, அகலத்தில் மாற்றம் இல்லை. மருத்துவ குழு முழுவதுமாக சேர்ந்ததுதான். ஊனம் கணக்கிடப்பட்டது. 3 மருத்துவர்களும் ஒன்றாகத்தான் பரிசோதனை செய்தோம், தனித்தனியாக செய்யவில்லை. மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்டது Partial Functional Disability ஆகும். முறையாக பரிசோதனை செய்யாமலும், உரிய உபகரணங்களை பயன்படுத்தி ஆய்வு செய்யாமலும் மனுதாரருக்கு குறைவாக Permanent Disability கணக்கிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பொதுவாக டிபியா எலும்பு முறிந்தால் 30 சதவீதம் Permanent Disability இருக்கும் என்றால் சரியல்ல. மனுதாரரை மீண்டும் ஒருமுறை பரிசோதனைக்கு எங்கள் மருத்துவ குழுவுக்கு அனுப்ப முடியும். நான் முறையாக பரிசோதனை செய்யாமல் குறைவாக Disability கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.02.09 14:42:29 +0530

Subordinate Judge,
Avinashi.